www.StudyGuideIndia.com

**4403**

Register Number

**Part III**

# உளவியல் / PSYCHOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ]　　　　[ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :　　　　15 × 1 = 15

1. வலிமையூட்டல் ஒரு .......................... வலுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.
2. கற்றல் ஓர் .......................... நடத்தையாகும்.
3. .......................... என்ற சொல்லின் நிறமாலையின் நிறங்களை நினைவில் வைத்துக் கொள்ளலாம்.
4. புலனுணர்வுகளே .......................... திறவுக் கோல்களாகும்.
5. .......................... காலப் போக்கில் மறக்கப்படுவதில்லை.
6. ஓர் குறியீடு ஒரு .......................... அடையாளம் ஆகும்.
7. ஒரு நாளில் மறதியின் அளவு ..........................
8. கணிதத்திலும், புள்ளியியலிலும் நாம் .......................... பயன்படுத்துகிறோம்.
9. குழந்தைகள் .......................... மிக்கவர்கள்.
10. பாதி மீன் உடலும் மிகுதி பெண்ணின் உடலுமாக இருப்பது .......................... .

[ Turn over

www.StudyGuideIndia.com

11. ........................ மற்றும் வலியும் ஒரே நேரத்தில் காணப்படலாம்.

12. கவலையைக் குறைக்கும் வழி ........................ காணுதல் ஆகும்.

13. தசைப்பிடிப்பும் சீரான உடலமைப்பு உடையவர்கள் ........................ வகையினராவர்.

14. சவாலை ஏற்கும் வண்ணமாக அமைந்ததே ........................ சோதனையாகும்.

15. மனநலத்தை அடைவதற்கானதொரு வழிமுறையே ........................ .

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 15 × 1 = 15

16. கற்றலின் வகைகள்

அ) இரண்டு

ஆ) மூன்று

இ) நான்கு

ஈ) ஐந்து.

17. கொள்கை சார்ந்த கற்றநிலை

அ) தேக்கநிலை

ஆ) ஆரம்பப் பின்னடைவு

இ) நிறுத்த நிலை ( அல்லது ) கற்றலின் முடிவு

ஈ) இறுதி விறுவிறுப்பு.

18. 6 நாட்களில் மறதியின் அளவு

அ) 66%

ஆ) 72%

இ) 79%

ஈ) 75%.

www.StudyGuideIndia.com

19. தற்காலிகமான நினைவு என்பது

அ) குறுகியகால நினைவு

ஆ) உடனடியான நினைவு

இ) நினைவு கூர்தல்

ஈ) மீண்டும் கற்றல்.

20. திரும்பக் கூறலும், பயிற்சியும் கற்றலை நினைவிலிருத்தப்படுவது

அ) மிக நீண்ட காலத்திற்கு

ஆ) நீண்ட காலத்திற்கு

இ) குறுகிய காலத்திற்கு

ஈ) மிகக் குறுகிய காலத்திற்கு.

21. மறதி என்பது எவ்வகை செயல்முறையாகும் ?

அ) மந்தமான

ஆ) சுறுசுறுப்பான

இ) ஆர்வமான

ஈ) உபயோகமான.

22. இஸ்டேன் ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் முதல் தலைவர்

அ) பாவ்லாவ்

ஆ) வாட்சன்

இ) கோஃலர்

ஈ) டேவிட் ஸ்டார் ஜோர்டன்.

www.StudyGuideIndia.com

23. ஆங்கில மொழியில் உள்ள ஒலியங்கள்

அ) இருபத்தி ஆறு

ஆ) முப்பத்தி ஆறு

இ) நாற்பத்தி ஆறு

ஈ) ஐம்பத்தி ஆறு.

24. மொழியின் மூன்றாது உறுப்பு

அ) சொற்றொடரிலக்கணம்

ஆ) சொல்லின் இலக்கணம்

இ) பகுத்தறிந்து சிந்தித்தல்

ஈ) அலகு ஒலியம்.

25. ஹெபர் மீத்தெளி பிம்பம் பற்றிய ஆராய்ச்சியை .................. பள்ளி சிறுவர்கள் மேல் மேற்கொண்டார்.

அ) 5

ஆ) 20

இ) 10

ஈ) 25.

26. இருட்டைப் பற்றிய கிலி

அ) ஆர்டோவோஃபியா

ஆ) அகோரோ வோஃபியா

இ) ஜூவோஃபியா

ஈ) நிக்டோவோஃபியா.

www.StudyGuideIndia.com

27. மனவெழுச்சி நிகழ்வு நேரம்

அ) மிகவும் அதிகமானது

ஆ) அதிகமானது

இ) மிகவும் குறுகியது

ஈ) குறுகியது.

28. உடலியல் மாறுதல்களிலிருந்து மனவெழுச்சி ஏற்படுகிறது எனக்கூறும் கோட்பாடு

அ) ஜேம்ஸ் - லாங்

ஆ) அறிவாற்றல்

இ) கானன் - பார்டு

ஈ) மக்டா - ஆர்னால்டு.

29. பிரீட்மென் மற்றும் ரோசன்மென் என்பவர்கள்

அ) ஆளுமை வல்லுநர்கள்

ஆ) இருதய வல்லுநர்கள்

இ) உளப்பிணி வல்லுநர்கள்

ஈ) குழந்தை வல்லுநர்கள்.

30. 'ஆரோக்கியமான உடலிலுள்ள நலமுள்ள மனம்' வளமான சமுதாயத்தில் வாழு எனும் குறிக்கோள் நிறுவனம்

அ) ஆரோக்கிய நிறுவனம்

ஆ) மாநில ஆரோக்கிய நிறுவனம்

இ) உலக ஆரோக்கிய நிறுவனம்

ஈ) உலக ஆராய்ச்சி நிறுவனம்.



www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) விடைகள் சுருக்கமாகவும், துல்லியமாகவும் நான்கு வாக்கியங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

20 × 3 = 60

31. தொடராகக் கற்றல் என்றால் என்ன ?

32. கற்றல் வளைக்கோட்டில் தேக்கநிலைக்கு பொறுப்புள்ள காரணிகள் யாவை ?

33. நினைவுக்களைத்தல் என்றால் என்ன ?

34. நினைவின் வகைகள் யாவை ?

35. நினைவுக்குறிப்புகள் என்றால் என்ன ?

36. மன் என்பவரின்படி மறதி என்றால் என்ன ?

37. பிறழ்வு நிலை மறதி என்றால் என்ன ?

38. சிந்தித்தலின் தன்மைகளில் ஏதேனும் மூன்றினை கூறு.

39. சிந்தனைச் செயல் முறையில் மூன்று முக்கியப் பண்புக்கூறுகள் யாவை ?

40. கற்பனையின் வகைகள் யாவை ?

41. பகற்கனவுகள் என்றால் என்ன ?

42. நம் கனவுகளுக்கான மூன்று முக்கிய காரணங்கள் யாவை ?

43. ஒத்துணர்வு நரம்பு மண்டலத்தால் ஏற்படும் மாற்றங்களில் ஏதேனும் மூன்றினைக் கூறு.

44. பிட்யூட்டரி சுரப்பியின் இரண்டு பகுதிகள் யாவை ?

45. பெருஞ்சினம் என்றால் என்ன ?

46. மனவெழுச்சிக்கும், ஊக்கமூட்டிக்கும் உள்ள வேறுபாடு யாது ?

47. மார்டன் பிரின்ஸ்சின் ஆளுமை வரையறை யாது ?

48. C.G. யூங்கின் ஆளுமை பாகுபாடு எத்தனை ? அவை யாவை ?

49. உளநாடகம் என்றால் என்ன ?

50. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் என்றால் என்ன ?

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

குறிப்பு : i) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் சுருக்கமாகவும், 15 வாக்கியங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். $5 \times 10 = 50$

51. உட்காட்சி வழிகற்றலில் கோஃலர் பரிசோதனையை விவரி.

52. பிறழ்வு நிலை மறதியின் இரண்டு காரணங்களை விவரி.

53. குறுகியகால நினைவு மற்றும் நீண்டகால நினைவு பற்றி விவரி.

54. பிரச்சினை தீர்த்தலின் படிகளை விவரி.

55. மீத்தெளி பிம்பங்கள் பற்றி விவரி.

56. கானன் - பார்டு கோட்பாடு பற்றி விவரி.

57. ஆளுமை வகையில் ஷேல்டனின் பாகுபாடு பற்றி விவரி

58. உளநலத்தின் இயல்புகள் யாவை ?

## பகுதி - ஈ

குறிப்பு : i) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். $3 \times 20 = 60$

59. ஆக்க நிலையிருந்த வழிக்கற்றலை ஐவன் பாவ்லோவ் பரிசோதனையுடன் விவரி.

60. மனப்பாடம் செய்யும் முறைகள் பற்றி விவரி.

61. நினைவின் பண்புக்கூறுகள் பற்றி விவரி.

62. ஆளுமையை அளவிடும் முறைகள் பற்றி விவரி.

63. உளநலத்தின் செயல்முறைக் கொள்கைகள் பற்றி விவரி.

www.StudyGuideIndia.com